ரூ.14.90 கோடி மதிப்பில் - தமிழ்நாடு அரசு

# போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் புதுப்பிக்கப்பட்ட 100 பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.8.2023) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 14 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட 100 பேருந்து களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் பேருந்துப் பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்துச் சேவையை அளித்து வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை, சாதாரண நகர கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக "மகளிர் கட்டணமில்லாப் பயணம்" திட்டம், பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், புதிய பேருந்துகளை கொள்முதல் செய்தல், பேருந்துப் பணிமனைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

முதல்வர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் 110விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களின் பேருந்துப் பயன்பாடு அதிகமான நிலையில், போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருவதாகவும், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் (Chassis) நல்ல நிலையில் உள்ள 1000 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்டி, பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை மேம்படுத்திடும் வகையிலும், அடிச்சட்டம் நல்ல நிலையிலுள்ள 1000 பழைய பேருந்துகளை 152.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் முதற்கட்டமாக, விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 16 பேருந்துகளும், சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 15 பேருந்துகளும், கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 37 பேருந்துகளும்,திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 32 பேருந்துகளும், என மொத்தம் 100 பேருந்துகள் 14 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் அவர்கள் நேற்றைய தினம் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக்கழகங்களின்மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

சென்னை-கலைவாணர் அரங்கில் - காவல்துறை சார்பில் நிகழ்ச்சி!

# 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' உறுதிமொழி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஏற்கப்பட்டது!

**சென்னை, ஆக.12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (11.08.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.**

**மேலும், காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்து கொண்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களால் இந்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.**

**அதன் விபரம் வருமாறு:-**

போதைப் பொருட்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்திடவும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்களை அதிகப்படுத்திடவும், போதைப் பொருட்கள் எந்த வடிவில் வந்தாலும் அதை அடியோடு ஒழிக்க தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் முதலமைச்சர் அவர்கள் காவல்துறைக்கு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் போதை ஒழிப்பு தொடர்பான தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு காவல்துறை சார்பில் 11.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" தொடக்க விழாவில் முதலமைச்சர் தலைமையில் நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி ஏற்கப்பட்டது. மேலும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகியவற்றை இணைத்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வு துறை" என்ற புதிய பிரிவை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" விழாவில், நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள், தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### உறுதிமொழி

**"போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தின ரை யும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.**

**போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்."**

அதனைத் தொடர்ந்து அமலாக்கப் குற்றப்புலனாய்வுத் துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள போதைப் பொருட்கள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார குறும்படத்தை முதல்வர் அவர்கள் வெளியிட்டார். போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகளை விளக்கிடும் இவ்விழிப்புணர்வு குறும்படம் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படும்.

மேலும், போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு, மாணவர்களை எளிதாகச் சென்றடைய, அவர்களைக் கவரும் வகையில் பாடல் காணொலியும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வழக்குகளில் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 13,000 கிலோ கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி நேற்று அழிக்கப்பட்டது.

"போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உருவாக்கிடும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட போதைக்கு எதிரான மாணவர் குழுக்களும் (AntiDrug Clubs), நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் (NSS), தேசிய மாணவர் படை (NCC) மற்றும் இதர மாணவர்கள் இயக்கங்களின் மூலம் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தினை தொடர்ச்சியாக மேற்கொள்ள; சிறப்பு தன்னார்வலர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் 22,447 குற்றவாளிகளுக்கு எதிராக 16,023 வழக்குகள் பதியப்பட்டு 42,337 கிலோ கஞ்சா, 1.234 கிலோ ஹெராயின், 74,412 போதை மாத்திரைகள் மற்றும் 223 கிலோ பிற போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போதைப் பொருள் தடுப்பு சட்டப்பிரிவு வழக்குகளில், குற்றவாளிகள் மற்றும் அவரது குடும்பத்தினரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டு, அவர்களின் பெயரிலுள்ள சொத்துக்களை கையகப்படுத்தும் தொடர் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் ரூ.18.15 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள் மற்றும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் சங்கர் ஜிவால், சென்னைப் பெருநகர காவல் ஆணையர் சந்திப் ராய் ரத்தோட், காவல்துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) மகேஷ் குமார் அகர்வால், காவல்துறை மற்றும் அரசு உயர்அலுவலர்கள்கலந்துகொண்டனர்.

---

# மணிப்பூர் தீர்வுக்குத் தேவை பிரதமரின் சொல்லும் செயலுமே!

## 'தீக்கதிர்' தலையங்கத்தில் வலியுறுத்தல்

*சென்னை, ஆக.12-*

*"மணிப்பூர் தீர்வுக்குத் தேவை பிரதமரின் சொல்லும் செயலும்" என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*இது குறித்து 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-*

*மணிப்பூரில் நிகழும் தொடர்ச்சியான வன்முறை குறித்த எதிர்க் கட்சிகளின் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். வன்முறையில் நடைபெற்ற சம்பவங்கள் வெட்கக்கேடானவை. அவற்றை அரசியலாக்குவது அதைவிட வெட்கக் கேடானவை என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதனன்று மக்களவையில் பேசினார்.*

*மணிப்பூரில் நடைபெற்ற சம்பவங்கள் மட்டுமா வெட்கக்கேடானவை? மாநில, ஒன்றிய அரசுகள் இரட்டை என்ஜின் ஆட்சிகள் நடந்து கொண்ட முறைகளும்தான் வெட்கக் கேடா னவை. முதல்வர் பைரேன் சிங்கின் காவல் துறை, மணிப்பூர் சகோதரிகளை கலவரக்காரர்களிடம் ஒப்படைத்தது வெட்கக்கேடானது. கொடுமைகளையும் கொடூரங்களையும் மூடி மறைத்து விடலாம் என்றெண்ணி இணைய சேவையை முடக்கம் செய்தது வெட்கக் கேடானது.*

*2002இல் குஜராத்தில் நடந்த வன்முறை வெறியாட்டங்களை பார்த்துக் கொண்டும் கல வரக்காரர்களுக்கு உதவிக் கொண்டும் இருந்த காவல்துறையின் நடவடிக்கைகளைப் போன்றதுதான் மணிப்பூர் காவல் துறையின் செயல்பாடும்.*


தீக்கதிர்

2023 ஆகஸ்ட் 11 வெள்ளிக்கிழமை

எது வெட்கக்கேடு? யார் அரசியலாக்குவது?

மணிப்பூரில் நிகழும் தொடர்ச்சியான வன்முறை குறித்த எதிர்க் கட்சிகளின் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். வன்முறையில் நடைபெற்ற சம்பவங்கள் வெட்கக்கேடானவை. அவற்றை அரசியலாக்குவது அதை விட வெட்கக் கேடானவை என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதனன்று மக்களவையில் பேசினார்.

மணிப்பூரில் நடைபெற்ற சம்பவங்கள் மட்டுமா வெட்கக்கேடானவை? மாநில, ஒன்றிய அரசுகள்- இரட்டை என்ஜின் ஆட்சிகள்- நடந்து கொண்ட முறைகளும்தான் வெட்கக்கேடானவை. முதல்வர் பைரேன் சிங்கின் காவல் துறை, மணிப்பூர் சகோதரிகளை கலவரக்காரர்க

*அன்றைய பிரதமர் வாஜ்பாய், எந்த முகத்தைக் கொண்டு வெளிநாடு போவேன் என்று கூறினார். ஆனாலும் முதல்வர் மோடியை பதவி நீக்கம் செய்யவில்லை. அதுபோல இன்று பிரதமர் மோடி, இந்தியாவுக்கே அவமானம் என்று கூறி விட்டு, பிற மாநிலங்களில் நடப்பது போல் தான் இதுவும் என்று நியாயப்படுத்தினார்.*

*அன்று பிரதமர் வாஜ்பாய் வெளிநாடு போகவில்லை. இன்றோ 56 அங்குல அஞ்சா நெஞ்சர் மோடி அயல்நாடுகள் சென்று வந்தார். அத னால் உலக அளவில் அவப்புகழ்பெற்ற பிரதம ராக இருக்கிறார். 17 மணி நேரம் உழைப்பதாக அமித்ஷா கூறும் மோடிக்கு சில மணி நேரம் கூட மணிப்பூருக்காக ஒதுக்க முடியாத இரும்பு நெஞ்சத்தைத் தான் நாடு கண்டு விட்டதே.*

*மே 4 சம்பவம் பற்றி வீடியோ வெளியாகும் வரை அரசு அறிந்திருக்கவில்லை என்பது தான் செயல்படும் அரசா? ஊடகங்களில் பகிராமல் டிஜிபிக்கு அனுப்பியிருந்தால் குற்றவாளிகளை கைது செய்திருக்கலாமே என்று அமித்ஷா கேட்பது, இரட்டை என்ஜின் ஆட்சியின் செயலற்ற தன்மையா? சம்பவங்களை மூடி மறைத்திட முயலும் கொடூர எண்ணமா?*

*ஒன்றிய அரசு நினைத்தால் ராணுவத்தை அனுப்பி அமைதியை ஏற்படுத்தியிருக்க முடியா தா? பேச்சுவார்த்தைக்குழு அமைத்திருக்கி றோம் என்று கூறுவது வன்முறையாளர்களுக்கு உதவும் செயல் அல்லவா? பழங்குடி மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அமைதி திரும்ப வேண்டும் என்று மக்களவையில் தீர்மானம் நிறைவேற்றுவது தான் திறனுள்ள அரசின் செயலா? மணிப்பூருக்கு இப்போதைய தேவை பிரதமரின் சொல்லும் செயலுமே! இதை எதிர்க்கட்சிகள் வலியுறுத்துவது அது அரசியலாக்குவதாகாது.*

*இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

---


### தி.மு.க. மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிப்பு!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணியின், நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தை வரும் ஆகஸ்ட் 10ம் தேதிக்குள் மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, தலைமைக் கழகத்திலோ வழங்க அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, பல்வேறு தரப்பிலிருந்து காலஅவகாசம் அளிக்க வேண்டுமென்று வந்த கோரிக்கையை ஏற்று, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் விண்ணப்பப் படிவத்தை வரும் 18.08.2023ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குள் ஒப்படைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09.08.2023

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி


---

சட்டவிரோத வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட

# 2 தமிழர்கள் கம்போடியாவிலிருந்து - அரசு செலவில் மீட்பு!

## சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வரவேற்றார்!

*சென்னை, ஆக. 12-*

*தகவல் தொழில் நுட்ப வேலைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டு, சட்டவிரோத வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்பட்ட 2 தமிழர்கள் கம்போடியா விலிருந்து தமிழ்நாடு அரசின் செலவில் சென்னை மீட்டு வரப்பட்டனர்*

*நேற்று அதிக சம்பளத்தில் வெளிநாடுகளில் தகவல் தொழில் நுட்ப வேலை பெற்றுத்தவருவதாகக் கூறி கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சட்டவிரோத இணையதள வேலைகளைச் செய்ய தமிழர்கள் கட்டாயப்படுத்தப் படுவதாகவும், அவ்வேலைகளைச் செய்ய மறுத்தால், வேலை அளிப்போரால் கடுமையாகத் தாக்கப்படுவதாகவும் தகவல்கள் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வரப்பெற்ற நிலையில், அவர்களை விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் குடும்பத்தினர் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.*

*முதல்வரின் ஆணைப்படி, கம்போடியா- தாய்லாந்து-மியான்மர் ஆகிய நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்கும் பணியில் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறை, சம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களுடன் இணைந்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டது.*

*அதனைத் தொடர்ந்து, 04.10.2022 - 04.07.2023 வரை கம்போடியாவிலிருந்து 25 தமிழர்களும், மியான்மர் நாட்டிலிருந்து 22 தமிழர்களும், தாய்லாந்து நாட்டிலிருந்து 34 தமிழர்களும் மீட்கப்பட்டு தமிழ்நாடு அரசின் உதவியுடன் தமிழ்நாடு அழைத்துவரப்பட்டுள்ளனர்.*

*இந்நேர்வில், தற்போது மீண்டும் 2 தமிழர்கள் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறை உதவியுடன், கம்போடியா நாட்டிலிருந்து மீட்கப்பட்டு, சென்னை விமான நிலையத்திற்கு 11.08.2023 அன்று அதிகாலை 12.30 மணியளவில் அழைத்து வரப்பட்டனர். அவர்களை தமிழர் நலத்துறை அமைச்சர் வெளிநாடு வாழ் தமிழர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மற்றும் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் (ஆணையர், அயலகத்தமிழர் நலத்துறை) மற்றும் அரசு அலுவலர்கள் வரவேற்றனர்.*

*மேற்காணும் நாடுகளுக்கு வேலைக்குச் செல்வது தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாகவும், தொலைக்காட்சி & செய்தித்தாள்கள் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், அதிக சம்பளம் மற்றும் பதிவுபெறாத முகவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி, கம்போடியா -தாய்லாந்து - மியான்மர் ஆகிய நாடுகளுக்குச் சென்று சட்டவிரோதக் கும்பல்களிடம் சிக்கி துன்புறும் நிகழ்வு தொடர்கின்றது.*

*எனவே, கம்போடியா- தாய்லாந்து - மியான்மர் ஆகிய நாடுகளின் வேலை வாய்ப்பு தொடர்பான தகவல்களின் நம்பகத்தன்மையைக் மேலும், கண்டுணர்ந்து செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தகவல்களுக்கு "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தினை nrtchennai@tn.gov.in/nrtchennai@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

*இந்நேர்வில் இதுவரை தாய்லாந்து, மியான்மர் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து 83 தமிழர்கள் மீட்கப்பட்டு, அவர்களது குடும்பங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளனர்.*



போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு பிரச்சாரத்தை ராணிப்பேட்டையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கொடி அசைத்து தொடங்கி வைத்த போது எடுத்த படம் . அருகில் மாவட்ட ஆட்சியர் ச. வளர்மதி, மாவட்ட கண்காணிப்பாளர் கிரண்சுருதி, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் – ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


கம்போடியா நாட்டில் பணிக்குச் சென்று, சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுமாறு துன்புறுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவர், அரசின் செலவில் மீட்கப்பட்டு சென்னை அழைத்து வரப்பட்டனர். அவர்களை, விமான நிலையத்தில் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வரவேற்றார். அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் உடன் உள்ளார்.